**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்**

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி .ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2025-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் நாள் புதன்கிழமை
இ.ம.எண்.239/2024 இன் அ.வ.எண்.207/2022

இளையபெருமாள் ...... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. அரிகிருஷ்ணமூர்த்தி (இறந்தார்)
2. தமிழரசி
3. சந்திரசேகர்
4. பாலு
5. வாசுகி
6. மாவட்ட ஆட்சியர், கடலூர்
7. வட்டாட்சியர், சிதம்பரம்
8. சாவித்திரி
9. பாரதிதாசன்
10. ஜெயபாரதி ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைக்கால மனு என் முன்னர் இன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.பாண்டியன் அவர்கள் அஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தார், 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், 6 மற்றும் 7ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு தரப்பு வழக்கறிஞர் திரு. இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், 8, 9 எதிர்மனுதாரர்கள்

தரப்பில் வழக்கறிஞர் திரு.R.திவ்யா அவர்கள் ஆஜராகியும், 10 ம் எதிர்மனுதாரர் தரப்பில் நீதிமன்ற வருகையின்மையால் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவண்ங்களை பரிசீலணை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலணைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

வழக்கில் இறந்துபோன **1**ம் பிரதிவாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட **19** நாட்கள் காலதாமதத்தை மன்னித்து கொண்டு மனுதாரின் வாரிசு மனுவையும் மற்ற மனுவையும் கோப்பில் எடுத்துக்கொண்டு உத்தவிட கோரி இம்மனு தாக்கல்.

**2.மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

மனுதாரர் வழக்கில் வாதி என்றும், எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், 3 மற்றும் 4 ம் பிரதிவாதிகள் வக்கீல் வைத்து வழக்கை நடத்தி வருகின்றனர் என்றும், வழக்கு தன் சார்பாக பிரதிவாதிகளுக்கு எதிராக தன்னையும் 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளையும் இறந்து போன தனது தகப்பனாரின் சட்டப்படியான வாரிசுதாரர்களாக நீதிமன்றத்தில் விளம்புகை செய்ய கோரி வழக்கை தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியும் தனது சகோதரருமாகிய அரிகிருஷ்ணமூர்த்தி என்பவர் இறந்துவிட்டார் என்றும், ஆகையால் இறந்துபோன அரிகிருஷ்ணமூர்த்தி என்பருவருக்கு வாரிசு சேர்ப்பதில்

காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதன் காரணமாக வாரிசு சேர்த்து வழக்கை மேல் நடத்தும் உரிமை அற்றுபோய் (Abatement)ஆகி அந்த சமயத்தில் தனக்கு மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் நாட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்தாகவும், ஆகையால் வாரிசு மனுதாக்கல் செய்வதில் 19 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், காலதாமத்தை மன்னித்து மனுவை ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்றும், வழக்கில் 1ம் பிரதிவாதிக்கு வாரிசு சேர்ப்பதில் ஏற்பட்ட 6 நாட்கள் காலதாமதத்தை மன்னித்துக் கொண்டு இத்துடன் தாக்கல் செய்துள்ள வாரிசு சேர்க்கும் மனுவை கோப்பில் எடுத்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதிக்க வேண்டும் என்றும், இல்லையெனில் தனக்கும் மற்ற வாரிசுதாரர்களுக்கும் வீண் கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிரிருரையின் சுருக்கம்**

எதிர்மனுதாரர் / பிரதிவாதி 01.10.2023 இறந்தார் என்பதும், அவருக்கு 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. மனுவில் காலதாமதத்திற்காக குறிப்பிட்ட காரணமும், வேண்டுமென்றே கால தாமதம் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளதும் மறுக்கப்படுகிறது. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் முற்றிலும் பொய் என்றும், ஏற்புடையது அல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவு செய்யுமாறு வேண்டப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள காலதாமத மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் பிரதிவாதியும் தனது சகோதரருமாகிய அரிகிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டார் என்றும், இறந்துபோன அரிகிருஷ்ணமூர்த்திக்கு வாரிசு சேர்ப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதன் காரணமாக வாரிசு சேர்த்து வழக்கை மேல் நடத்தும் உரிமை அற்றுபோய் (Abatement)ஆகி அந்த சமயத்தில் தான் மஞ்சள் காமாலை நோயினால் பாதிக்கப்பட்டு வீட்டில் நாட்டு வைத்தியம் செய்து கொண்டிருந்ததாகவும், அதனால் வாரிசு மனுதாக்கல் செய்வதில் 19 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், மனுவை அனுமதிக்குமாறு வேண்டப்பட்டுள்ள நிலையில், ஆட்சேபனையில் எதிர்மனுதாரர் / பிரதிவாதி 01.10.2023 இறந்தார் என்பதும், அவருக்கு 8 முதல் 10 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் என்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. காலதாமதத்திற்கான காரணம் மட்டுமே மறுக்கப்பட்டுள்ளது என்பதால் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாருக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என இந்த நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**7.** இறுதியாக , இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 9-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு

வ.வி.எண்.239/2024

இன்

அ.வ.எண்.207/2022

நாள்.09.07.2025